Subscription Rs 1 [illegible]0
Postage to Ceylon & India 5
do Straits 75

Advertising charges per line 10
do per half col Rs 3 00
do per Column 5 00

# THE Hindu Organ

VOL VIII ௮-ம் புத்தகம். | JAFFNA, WEDNESDAY SEPTEMBER 30, 1896 | இந்துசாதனம். | கலியுகவருஷம் ௪௯௯௮. ௧௮௯௬ செப்டம்பர் ௩௦உ. | NO 4. இலக்கம் ௪.

PUBLISHED EVERY OTHER WEDNESDAY. பக்ஷத்துக்கொருமுறை புதன்கிழமைகளிற் பிரசுரிக்கப்படும்.

## NOTICE.

THE JAFFNA COMMERCIAL CORPORATION LITD

OFFICE BANK HALL SEA STREET JAFFNA

The Company Opens Current accounts with sums of not less than Rs. 100 and allows interest at 2 per cent per annum on minimum Monthly balances of Rs. 500 and upwards.

Fixed deposits received on following terms:—

For 12 months Interest at 5 0/0 per annum allowed
" 6 " " 4 " " "
" 3 " " 4 " " "

Approved bills discounted Money advanced on edges.

Remittances can be made to and from Colombo

Colombo Bankers. Bank of Madras.

Cheques and foreign drafts and bills of exchange on the Colombo Banks cashed.

Island and foreign goods imported on commission

Office hours from 10-30 A. M. to 4 P. M.

Wm: MATHER
Managing Director

WARD AND DAVY
NAVALAR KOTAM

## AMERICAN TIME PIECES.

The best of Time Pieces. Guaranteed for 5 years use.

Riverside Alarm and Date Time Piece Rs 5/50
Riverside Plain ... ... ... ... ...... „ 4/00.
Riverside Mandolin... ... ... ... „ 4/50
Riverside Girl...... ... ... ... ... „ 4/50.
„ Puff... ... ... ... ... ... „ 4/50

## BEST REAL NICKEL WATCH CHAINS.

Money refunded if corrodes. Each Chain 2/50.

Ward and Davy

### கூந்தல்வளர்தைலம்.

இது நன்றாக மயிரைவளர்த்து அழகாக்கும் விலை ரூபா ௧—௰ம்.

### சந்தனக்கலவைத்தைலம்.

இது வெள்ளைநோயால் வருந்துபவர்க்குக் கைகண்ட உள்மருந்து ரூபா ௨.

### சுகந்த பல்லுப்பொடி.

இது முரசுகரைந்து அடிக்கடி பல்வலியும் அசைவுமுடையவர்களுக்கு மெத்த நல்லது. பல்லுக்கறுக்காது. வாய்நாற்றத்தை யெடுத்துவிடும் ஒருதகரம் ஒருவருக்கு இரண்டுமாசத்துக்குப் போதியது. சதம் ௬௰.

### கௌமாராஞ்சனதைலம்

இது சமஸ்கிருத வாகடப்படி முடிக்கப்பட்ட தைலம். தாதுப்பெலமில்லாதவர்களும் கண் ரோகங்களுள்ளவர்களும் ஸ்நானம்பண்ணிவரச் சுகமடைவார்கள். கெர்ப்பவாயுவினால் சந்தானமின்றியிருக்கும் பெண்கள் சாப்பிட்டும் முழுகியும் வந்தால் தவறாமல் தேகத்தழைவுடன் சந்தானவிருத்தியு முண்டாகும். இது மிகப் பெயர்பெற்ற தைலம். விலை இருபத்தைந்து ரூபா. ஒருபோத்தல் இருபது முழுக்குக்குக் காணும்.

☞ சுத்தமான கஸ்தூரி கோரோசனை குங்குமப்பூவும், எல்லாவிதமான இங்கிலீஷ் மருந்துகளும் விலை சகாயமாகப் பெற்றுக்கொள்ளலாம். இரவிலும் மருந்துகள் விற்கப்படும்.

வாட் அன் டேவி
நாவலர் வீடு
யாழ்ப்பாணம்.

## IN THE DISTRICT COURT OF JAFFNA.

ORDER NISI.

Testamentary Jurisdiction Class I } No. 789

In the Matter of the Estate of the late Arumukam Chuppiramaniyam of Selangore in Straits Settlement — Deceased

Meenadchippillai widow of Chupperamainyam of Vaddukkoddai — Petitioner

Vs.

Muttukkumaru Arunachalam of Vaddukkoddai — Respondent

This matter of the Petition of Meenadchippillai widow of Chupperamainyam of Vaddukkoddai praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Maenadchippillai widow of Chuppramainyam of Selangore in Straits Settlement coming on for disposal before H. H. Cameron Esquire District Judge, on the 7th day of September, 1896 in the presence of Messrs Casippillai & Cathiravelue Proctors on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 4th day of September 1896 having been read, i[illegible]clared that the Petitioner is the lawful widow o[illegible]e said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to her unless the Respondent or any other person shall on or, before the 6th day of October 1896 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 7th day of September 1896

H. H. CAMERON
District Judge

## IN THE DISTRICT COURT OF JAFFNA.

ORDER NISI.

Testamentary Jurisdiction Class I } No. 792

In the Matter af the Estate of the late Chante daughter of Kantan of Puttoor — Deceased

Kantan Vairavan of Puttoor — Petitioner

Vs

1. Pattan Kanthan and his wife
2. Putial of Puttoor

Respondents

This matter of the Petition of Kantan Vairavan of Puttoor praying for Letters of Admistration to the estate of the abovenamed deceased Chante daughter of Kantan of Puttoor coming on for disposal before H. H. Camernor Esquire, District Judge, on the 14th day of September 1896 in the presence of Messrs Casippillai & Cathiravelu Proctors on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 10th day of August 1896 having been read, it is declared that the Petitioner is the brother of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondents or any other person shall on or, before the 20th day of October 1896 show sufficient cause to the satisfoction of this Court to the contrary.

Signed this 14th day of September 1896

H. H. CAMERON
Distric Judge

## THE HINDU ORGAN.

JAFFNA, WEDNESDAY SEPTEMBER 30, 1896

### *VACCINATION IN JAFFNA.*

There is now a very great outcry among the public here, in regard to the stringent manner in which vaccination rules are enforced among them by Dr. Thornhill, the Senior Medical Officer. It is said that, being himself the author of the rules and regulations issued by the Medical Department for the guidance of vaccinators, he is pledged to their absolute enforcement, regardless of the inconviences which the people might suffer.

We will not enter into the question of the efficacy of vaccination as a preventive measure against small-pox—a question about which great authorities are divided among themselves in Europe. Nor shall we stay to inquire whether vaccination should be done compulsorily or not. But it is well to point out that the finding of Royal Commisson on vaccination, the report of which was issued in England only last month, was that, though vaccination is to be approved of, the operation should not be insisted upon against the declared wish of the parents. The Commisson admits that some of the dangers said to attend vaccination are undoubtedly real and not inconsiderable in gross amount; yet, when considered in relation to the extent of the vaccination work done, are insignificant. A minority of the Commission consisting of Mr. Whitbread and Mr J. A. Bright object to compulsory vaccination in any form, and say that objection to vaccination could be removed by adopting the Scotch system of offering vaccination at the home of the child and providing for medical treatment of any untoward result which may arise. There can be no doubt that legislation on the lines of this report will soon follow in England.

Our present purpose is to show that vaccination could be effectively carried on here, without hurting the feelings and susceptibilities of the people and causing inconveniences to them, as it had been done here before the appointment of Dr Thornhill as Senior Medical Officer of this Province. It cannot be said that vaccination was neglected here during the time of his predecessors, as it is wellknown that this beneficent work was done at that time unostentatiously and in the best way possible, without creating uneasiness and discontent among the people.

Dr. Thornhill has now caused a census of all unvaccinated children to be taken by the headmen; and parents and guardians are compelled, under pain of prosecution, to produce them at the vaccine stations. Infants of the age of three months and upwards come under this rule. It need hardly be said that parents here have the greatest objection to allow the vaccination of children under one year old. If in such an enlightened country as Scotland vaccination is offered in the home of the child, how much more is such a system necessary in a conservative place like Jaffna where the people have not yet learnt to appreciate the benefits of vaccination.

It is also said that vaccinators are now required to go to houses in order to verify the list of the headmen, and also to examine all adults, males as well as females, for successful marks of vaccination, and to order such as have no successful marks to present themselves at the common place appointed for vaccination. Dr. Thornhill is, perhaps, unware, his previous experience of the native races of Ceylon being confined mainly, if not entirely, to the Indian coolies in the planting districts, that no respectable Tamil woman will allow herself to be examined by a male vaccinator for successful marks of vaccination about her person, and condescend to go to a public place to get herself vaccinated. We are surprised that he has not appointed some female vaccinators to carry on the work among the women of the Peninsula. It is also very strange that in a place like Jaffna, where on account of the peculiar habits and customs of the people registration of marriages is allowed to be done in private houses, females are not allowed the option of getting themselves vaccinated in their own houses.

௨

கணபதி துணை.

வாழ்கவந்தணர்வானவரானினம்..............
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக.........
ஆழ்கதீயதெல்லாமரனாமமே...............
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே..............

# விளம்பரம்.

இணுவில் தம்பிளாவத்தையிற் பரராசசேகரப் பிள்ளையார் கோவிற் காரியங்களுக்குமுன் தத்துவகாரராயிருந்த இணுவில் மயிலர் ஆறுமுகம் சரீராந்தத்தில் தாவடி ஸ்ரீ. பொன்னம்பலம் கதிர்காமரே கோவிற்காரியங்களைப் பார்க்கத் தக்கவரென்று கண்டு தன்வசமிருந்த கோவிற்பிரசியங்களை அவர்வசம் ஒப்புக்கொடுத்தபடியாலும் சென்ற ௬௨ம் ஆண்டு சித்திரைமீ˚ சகல குறித்த கோவிலுக்குத் தத்துவகாரரை ஏற்படுத்தற்காக விளம்பரஞ்செய்து அக்கோவிலிற் கூட்டப்பட்ட சபையாரால் தத்துவகாரரை நியமிப்பதற்குத் தெரிந்துகொள்ளப்பட்ட நாங்களும் எங்களோடுகூடிய நால்வரும் மேற்குறித்த பொ. க. வைத் தத்துவகாரராய் ஏற்படுத்தி இன்னுமச்சபையார் வேண்டுகோளின்படி சொத். இவை முகதாவில் வைதிகதியில் ௫௨ளசம் இலக்கத்தில் தத்துவ உறுதி எழுதப்பட்டு அவரொழுங்காய்ப் பராமரித்து வருகிறபடியாலும் ௬அ௬௯ம் ஆண்டு புரட்டாதி மாசம் ௯௨ ந் திகதி இந்துசாதனம் ௩ம் இலக்கப் பத்திரிகையிலெழுதியபடி பராமரிப்புக்காரரை ஏற்படுத்தல் வேண்டாமென்றும் அதற்கு வைபொப்பக்காரர் உரித்தாளிகளல்லரென்றும் கூட்டம் அனுவசியகமென்றுஞ்சொல்லிமறுக்கிறோம்.

இங்ஙனம்

| | |
|---|---|
| சி. சின்னத்தம்பி | சி. ஆறுமுகம் |
| இ. கதிரவேலு | சு. முருகர் |
| ம. குளந்தையர் | மு. சின்னத்தம்பி |
| வே. கனகசபை | இ. முருகர். 27-9-96. |

# இந்துசாதனம்.

## இதுவோர் தருணம்.

உலகத்திலே ஒவ்வொரு நூற்றூண்டந்தத்திலும் விசேஷ சற்சம்பவங்கள் நிகழ்ந்துகொண்டே வருகின்றனவென்பது இதிகாச ஆராய்ச்சியுடையார் யாவர்க்கு மொத்த துணிபே. கொப்பேணிக்கஸ், கலிலியோ (Copernicus, Galileo) முதலிய வான சாஸ்திரிகள் அண்டங்களுக்கெல்லாம் மத்தியாயுள்ளது சூரியன் என்னும் உண்மையை ஸ்தாபித்ததும், கீழ் இந்திய கொம்பனி (East India Company) யென்னும் நாமத்தோடு அங்கிலேயர் முதல்முதல் இந்தியாவுக்கு வந்து எமது தாய்நாட்டைக் கைப்பற்ற அடிகோலியதும், இன்னும் இவைபோல்வன பிறவும் ௧௮ம் நூற்றூண்டந்தத்தில் நடந்த விசேஷ சம்பவங்கள். புதினப்பத்திரிகைகளுக்குச் சுபாதீனமளிக்கப்பட்டதும், நியூற்றன், மில்ற்றன், அடிசன் (Newton, Milton, Addison) ஆதியாம் வித்துவ சிரோன்மணிகள் விளங்கியதும், பிரதிநிதி ராசாங்கம் (Representative Government) உற்பத்தியானதும் இன்னும் விரிவஞ்சி விடுத்த வேறுமாற்றங்களும் ௧௮ம் நூற்றூண்டந்தத்தற்றன. பிராஞ்சு தேசத்திலே, நெபோலியன் (Napoleon) என்னும் வீரன் தனது வீரபராக்கிரமத்தினாலே உலகமெங்கணும் நடுக்குறும்படி செய்ததும், அமரிக்காதேசம் சுயவாசுநாடாகிப் பிரஸ்தாபமடைந்ததும், எமது லங்காதிபம் அங்கிலேயர் கைப்பட்டதும், இன்ன பிற விசேடங்களும் ௧௯ம் நூற்றூண்டந்தத்தில் நடந்தன.

எமது ராணியாயகம் இந்தியசக்கிரவர்த்தினியானதும், அவரது ௬௦ மீ வருட மகுடோற்சவம் ஆங்கிலதுவசத்தின் கீழ்ப்பட்ட தேசமெங்கணும் வெகு ஆடம்பரத்துடன் கொண்டாடப்பட்டதும், ஐரோப்பிய ராசாங்கங்கள்தாமும் ஜயித்தல் கூடுமோவென ஐயுறநின்ற சீனதேசத்தை ஜப்பான்தேசம் வெற்றிகொண்டு எவர்க்குந் திகைப்பையும்; ஆச்சரியத்தையும் விளைத்ததும், ஆபிரிக்காவிலே தென் ஆபிரிக்ககொம்பனி (S. A. Company) ஸ்தாபிக்கப்பெற்று அநேகதேசங்கள் அங்கிலேயர் ஆணைக்குள்ளானதும், விவேகானந்தசுவாமியவர்கள் அமெரிக்கா, இங்கிலாந்து ஆதியாம் தேசங்களுக்குச் சென்று மதங்களுக்கெல்லாம் தாய் மதமாகிய எமது இந்துமதத்தைப் பிரசங்கித்து, அதன் மாட்சியைப் புலப்படுத்தியதும், இந்தியாவிலே (National Congress) என்னும் ஓர்சபை யுண்டாகி யாவர்கள் குறைகளை யெடுத்துக்காட்டிச் சித்திபெற்றுக்கொண்டு வருவதும், சகலகுணசம்பன்னராகிய சேர் றிட்சுவே (Sir, J. W. Ridgeway) பெருமான் எங்கள் தேசாதிபதியாய் வாய்த்ததும், யாழ்ப்பாணம் நெடுங்காலம் ஓர்திருத்தமுமின்றி முடம்பிடித்துக்கிடந்த நிலையினின்றும் நீக்கப்பெற்று, அதிசாதுரியமும், உற்சாகமும், கல்வித்திறமையும, பிரசைகள்நேசமும், தேசாபிவிருத்தியில் பெரிதும் அபிமானமுமுடையாராகிய ஐவேஷ் (Ievers) துரையவர்களைத் தலைவராகப்பெற்றதும், சைவபரிபாலன சபையாரால் இந்துக்கல்லூரி என்னும் பாரிய வித்தியாசாலை ஸ்தாபிக்கப்பெற்று பிரதம உபாத்திமார்களாக நான்கு B. A. பட்டவர்த்தனர்களையுடையதாய் செவ்வே நடத்தப்பட்டுவருதலும், இன்னும் வேறு அநேக திருத்தங்களும் நன்முயற்சிகளும் ௧௯ம் சதவருடாந்தத்தைக் குறிக்கும் விசேஷங்கள்.

ஆகவே இது நமக்கோர் வாய்ப்பானகாலமாயிருக்கின்றது. எடுத்தமுயற்சியைக் கைசோரவிடாது பற்றி நிற்போமாயின் காலமே கைகூட்டிவைக்கும். இத்தருணத்தை நாம் கைநழுவவிடாது ஆதாயப்படுத்திக்கொள்ளவேண்டியது. எம்மயல்நாடுகளும் ஆங்கிலசாதியாரும் முன்னேறித் தலையெடுத்துவருவதுபோல நாமும் எமதுநாடும் தலைத்தோங்கிச் சபிலேசக்கு வரவேண்டுமென்னும் பிட்பிராயம் நம்மகத்திடை இருப்பின் நாயசெய்யவேண்டிய தொன்றுண்டு. அஃதாவது நாமெல்லாம் ஒரேமனத்தினராகத் திரண்டு எம்மூர்க்கு வேண்டிய திருத்தங்கள் எவை எவையெனக் கலந்து யோசனைசெய்து நிச்சயித்து அவைகளைப் பெறுதற்கேற்ற பிரயத்தனங்களைச் செய்தல்வேண்டும்.

(க) யாழ்ப்பாணத்துக்கு றெயில்பாதை திறந்து வன்னிநிலயக் குடியேற்றுவது அத்தியாவசியகம். இச்சலாக்கியத்தை சர்க்காரினர் நமக்குச் சீக்கிரத்தில் ஈவாரன்பது திண்ணமாயினும் நாமிதனைத் தூங்கவிடாது வேண்டிய எத்தனங்களைச்செய்து வருதல்வேண்டும்.

(உ) இப்பொழுது இறைத்து வற்றூற்றெனக் கண்டிருக்கும் நிலாவரையை யாறணியாகக்கொண்டு எம்மூர்க் கமிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சலைச் செய்து தருமாறு அல்லது அதுகூடாதாயின் பட்டணமாதியாமிடங்களுக்கு சுத்தசலத்தைக்கொணர்ந்தாயினுந் தருமாறு கம்மரசினரை யறட்டல்வேண்டும். நம்மரசாண அரசிறை வருமானத்தில் மிகச் சிறியபாகமே எம்மூரிற் செலவிடப்படுதலால் இதற்கெனப் புதிதாய் ஓர் வரியை ஏற்படுத்தாது நிறைவேற்றித்தருதல் நம்மரசினர் கடமை.

(௩) நம்மூர்ப் புகையிலைவிலைவுகூடியும் செலவழியுந் துறைகள் குறைந்துமிருத்தலால், மனிலா திருச்சினாப்பளி முதலிய இடங்களில் உலர்த்துவதுபோல எமமூர்ப் புகையிலையையும் உலர்த்தி ஐரோப்பியர் பாவிப்புக்குத் தக்கதாய் செய்தால் அது செலவழிதற்கு இன்னுமொரு துறையைத் திறந்துகொள்ளலாம்.

(௪) உத்தியோகம்பெறுதல் நோக்கமாய் இங்கிலிசுப்பாஷையைப் படித்து ஈற்றில் தமது பெற்றூருடைய தொழிலையுஞ் செய்ய முடியாது அவதிப்பட்டுத் திரியும் வாலிபர் அநேகருளராதலால் இளம்பாயத்திலேயே கமம், வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றைப் பிள்ளைகள் கற்றுக்கொள்ளல் வேண்டும். கைத்தொழில்வித்தையைக் கற்றுக்கொள்ளத்தக்க திறமையும், விருப்பமுமுள்ளோர் எம்மூரில் அ[illegible]ளராதலாலும், மற்றைய மாகாணங்களினும் இம்ம[illegible]ாணத்துக்கே அரசினருதவி பெரிதும் வேண்டப்படுதலாலும், கொழும்பிலேஸ்தாபிக்கப்பட்டுள்ள (Technical school) என்னும் கைத்தொழிற் பாடசாலையைப்போன்ற ஓர் சாலையை, இங்கும் ஸ்தாபித்தல் அரசினர்கடன். அவ்வாறு ஸ்தாபிக்கப்பெறின், கொழும்புசென்று படிக்கப் போதிய இடம் பொருள் ஏவல் இல்லாதார்க்கு அது மிகப் பிரயோசனமாகும். எத்தொழிலினுங் கைத்தொழிலே தற்காலம் வாய்க்கக்கூடியது. நெருப்புக்குச்சி, காகிதம், பீங்கான் முதலியவைகளைச் செய்து இங்கே யனுப்பி, கப்பற்செலவு, தீர்வை முதலியன விறுத்தும், பெரும் லாபத்தை அன்னியதேசத்தினர் அடைகின்றனர். நாமிவைகளைச் செய்யக்கூடியவர்களாயிருந்தால் எவ்வளவு பெரும்[illegible]பத்தை யடையலாம். இவைபோன்ற இன்னுமநேக திருத்தங்களையும் நம்மூரில் நாமாகவும், அரசினருதவியைக் கொண்டும் செய்துகொண்டால் ௨௦ம் நூற்றூண்டுத் தொடக்கத்தில் நாம் கல்வி, செல்வம், நாகரீகம் முதலியவற்றில் ஏற்றமுடையவராக இருப்போமென்பது திண்ணம்.

# சமாசாரம்

காலநிலை:—நன்மழை வருஷித்திருக்கின்றது. விதைப்பு ஆரவாரமாய் நடக்கின்றது. மேன்மழைபெய்தால் பள்ளக்காணிக்காரர்பாடு கட்டமாய்முடியும்.

எங்கள் ஏசன்றர்:—இவர் தமது சுற்றோட்டத்தில் பூநகரிக்குப் போயிருக்கிறூர்.

நியாயதுரந்தரர்பரீட்சை:—பொலிஸ்க்கோட்டு நீதவான் ஸ்ரீ. தம்பு அவர்களுடைய சிரேஷ்ட புத்திரன் மெஸ். S. D தம்பு என்பவர் அப்புக்காத்து இரண்டாம் பரீட்சையில் சித்திபெற்றூரென்பதைக் கேட்டுச் சந்தோஷமாகேறும்.

—யாழ்ப்பாணம் தெக்குவேஸ் கோட்டுச் சக்கிடுத்தார் ஸ்ரீ. இ. சந்தையா அவர்கள் சிலநாள்லீவில், கொழும்புசென்று ௨-கிழமைவரையில் நின்று அந்தப்பக்கங்களைப் பார்த்துக்கொண்டு திரும்பினர்.

விறகு—இதனைக் கச்சேரியிற் பணங் கட்டித் துண்டுபெற்று வாங்கிச் செல்லவேண்டுமென்று புதிதாய் ஏற்படுத்தப்பட்ட ஒழுங்கு யாவர்களுக்கு வெகு வசதியீனத்தையும் தொல்லையையும் விளைத்துவந்ததால் இதனைப் பொறுக்கலாற்றூத பட்டணவாசிகள் நமது ஏசன்றருக்கு ஒரு மனுப்பத்திர மனுப்பியிருக்கின்றூர்களாம். இதனை நம ஏசன்றவர்கள் கவனித்து யாவர்கள் வசதிக்கேற்க ஓர் ஒழுங்கு பண்ணுவரெனக் காத்திருக்கின்றேம்.

—விளாங்குளம் கச்சேரிச் சக்கிடுத்தாராகிய சனுகம் ஸ்ரீ. K. தில்லையம்பலம் அவர்கள் சுகவீனங் காரணமாக லீவுபெற்றுத் தமது ஜனன ஊர்க்கு வந்தும் பூரண ஆரோக்கியம் பெறுததால் யாழ்ப்பாணங் கச்சேரிக் கிளாக் மெஸ். S. W. C. பிலிப்ஸ் என்பவரோடு, உத்தியோகக்கடமைகள் மாறிக்கொண்டு, இங்கேயே வேலைபார்த்துவருகின்றூர். மெஸ், பிலிப்ஸ் விளாங்குளம் சென்றனர்.

சிறுப்பு ஸ்ரீ. இராமலிங்கம்:—இவருக்கு விரோதமாக ஏற்படுத்தப்பட்ட சிவில்வழக்கும் தள்ளப்பட்டது. இத்தோடு இவரைப் பிடித்த உலோந்த சனியும் விட்டுநீங்கிற்று. இவர்மேற் கொண்டுவரப்பட்ட வழக்குக்களால் இவரடைந்த தொல்லையும் பணச்செலவும் கொஞ்சமல்ல.

நிலாவரை—இங்கே நடைபெற்று வந்த இறைப்பு சென்ற ௨௩உ நிறுத்தப்பட்டிருந்தும், மாகாண இஞ்சினீரவர்கள் இதனை இன்னும எழுபது நாளைக்கு இறைத்துப் பார்க்கவேண்டுமென்ற கேட்டபடியால் சென்ற புதன்கிழமை திரும்ப இறைக்கத் தொடங்கியிருக்கிறூர்கள். இவ்வாவியோடு சம்பந்தப்பட்ட இரண்டு நீர்நிலைகளைக் கண்டுபிடித்திருக்கிறூர்கள். ஒன்று இதற்குக் கிழக்கே மூன்றரைமைல் தூரத்திலும் மற்றையது மேற்குப்பக்கத்தில் ஆறரைமைல் தூரத்திலுமுள்ளது இந்நீர்நிலைகள் இவ்வாவியிற் தண்ணீர் வற்றுங்காலத்தில் வற்றியும் பெருகுங்காலத்தில் பெருகியும் வருகின்றனவாம். இம்மூன்றின் நீர்மட்டமும் இப்பொழுது எடுக்கப்படுகின்றது. இறைத்துப் பார்த்து வற்றூவெனக் கண்டால் யாழ்ப்பாணத்துக்கு ௩௰ மைல் தூரத்திலுள்ள நீர்நிலையிலிருந்து தண்ணீர் மிக இலகுவில் கொண்டுவரலாம்.

சுப்றீங்கோடு:—இது சென்ற ௩௨உ ஆரம்பமாயிற்று. வத்துப்பளைக்கு யாத்திரைபோன ஓர் கழவனை கொலைசெய்த முதலாம் நம்பர்வழக்கு முதல் விளங்கப்பட்டது. மெஸ் சசிச்செட்டியவர்கள் இவ்வழக்கை கீழ்க்கோட்டில் விசாரணைசெய்து பாரப்படுத்தியிருந்தார் ஸ்ரீ. அப்புக்காத்து சேனுகிராசா முடிப்புறத்து அப்புக்காத்தாக வழக்கை நடத்தினர். ஸ்ரீ. அப்புக்காத்து நாகலிங்கமவர்கள் மறியற்காரனுக்காக ஏற்பட்டுப் பேசினர். யூரித்துரைமார் மறியற்காரன் கைபிழைபாட்டுக்கொலைக்குக் குற்றவாளியெனத் தீர்க்க நீதிபதியவர்கள் அவனுக்கு ௭ வருஷக் கடினவூழியமறியல் விதித்தனர்.

இதன்பின் மூன்றூம்இலக்க வழக்கு விளக்கப்பட்டது. இதில் இளையதம்பி மருதப்பன் என்பவன் அடித்துப் பறித்தானென்னுங் குற்றச்சாட்டுக்குப் பாரப்பட்டிருந்தான். இவனுக்காக ஸ்ரீ. அப்புக்காத்து நாகலிங்கம் ஏற்பட்டுப் பேசினர் யூரித்துரைமார் அடித்தானென்னுங் குற்றச்சாட்டுக்குமாத்திரம் இவனைக் குற்றவாளியென்று சொல்ல நீதிபதியவர்கள் பன்னிரண்டுமாசத்திற்கு நன்னடக்கைப்பிணை கொடுத்துப் போகும்படியும், முறைப்பாட்டுக்காரிக்கு முப்பதுரூபா இறுக்கும்படிக்குந் தீர்த்தனர்.

௩௧ம் திகதி ௫-ம் ௬-ம் வழக்குகள் விளக்கப்பட்டன. இவ்வழக்குக்களில் உரும்பராயிலுள்ள ஓர்பள்ளன் வீடு இடித்துக் களவெடுக்கும் ஆயுதங்கள் சிலவற்றை வைத்திருந்தானென்றும், களவெட்டியிலே களவெடுக்க எத்தனித்தானென்றுங் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தான். ஸ்ரீ கனகசபையவர்கள் இவனுக்காக ஏற்பட்டுப்பேசினர். யூரிமார் குற்றவாளியென, நீதிபதியவர்கள் அவனை விடுதலையாக்கினர்.

அடுத்தவழக்கில் மாதகலைச்சேர்ந்த இரண்டு வாலிபர்கள் அக்கிராமத்தான் ஒருவனை அடித்துப் பாரதூரமான காயத்தை உண்டாக்கினூர்கள் என்பது குற்றச்சாட்டு இவர்களுக்காக ஸ்ரீ. அப்புக்காத்துக் கனகசபை அவர்கள் ஏற்பட்டுப்பேசினர். இருவருங் குற்றவாளிகளெனக் காணப்பட்டு ஒருவன் பதினெட்டுமாசக் கடினவூழியமறியலும் ஐந்து அடியும் விதிக்கப்பெற்றூன். மற்றவனுக்கு ௬-மாசமறியல் விதிக்கப்பட்டது.

௨௩ம் திகதி-யாகிய திங்கட்கிழமையன்று எஞ்சிய இருவழக்குக்களும் விளங்கப்பட்டன. இவைகளில் ஒன்றில் கொக்குவில் தாவடியென்னுமிருகுறிச்சிகளிலுமுள்ள எட்டு வாலிபர் (௧) கத்தி பொல்லு முதலிய ஆயுதங்களை உடையவர்களாய்க் கலகம்பண்ணினூர்களென்பதும் (௨) இவ்வழக்கிலே முறைப்பாட்டுக்காரராயுள்ளோரை அடித்துக்காயப்படுத்தினூர்களென்பதும் குற்றச்சாட்டு. ௧-ம் ௨-ம் ௩-ம் ௪-ம் எதிரிகளுக்கு ஸ்ரீ. அப்புக்காத்து நாகலிங்கமவர்களும், ஏனைய எதிரிகளுக்கு அப்புக்காத்து ஸ்ரீ. அழைகைக்கோனவர்களும் ஏற்பட்டார்கள். எதிரிகள் விடுதலையாகப்பட்டார்கள்.

பிற்பகல் நாலரை மணியளவில் சுளிபுரம் வழக்குத் தொடங்கியது. இதிலே அக்கிராமத்தானொருவனை கைபிழைபாட்டுக் கொலைசெய்தானென்பது குற்றச்சாட்டு. ஸ்ரீ. கனகசபை அவர்கள் இவனுக்காக ஏற்பட்டனர். குற்றவாளியெனக்காணப்பட்டு மூன்றுவருஷக் கடினவூழியமறியல் விதிக்கப்பெற்றூன்.

ருஷிய சக்கிரவர்த்தியும் அவர் மனைவியாரும்—இவர்கள் கொப்பனேஜன் என்னும் நகரத்தைச் சந்தித்து இப்பொழுது ஸ்கொற்லண்ட் தேசத்திற்குப் போயிருக்கிறூர்கள். நமது ராக்கினியின் விருந்தினராயிருந்து, அப்பால் பிராஞ்சுதேசம் சென்று அங்கு சிறிதுகாலந் தங்கியிருப்பார்களாம்.

இந்துமதம்—லண்டன் நகரத்திலே நமது சமய சாஸ்திரங்களைக் கற்பதற்கு ஓர் விருப்பம் பலர்மாட்டுமுண்டாயிருக்கின்றது. இங்கே ஒழுங்காய்ச் சமயப் பிரசங்கம் செய்வதற்கு ஓர் மண்டபம் கட்டுவதற்கும், ஓர் புத்தகசாலை ஏற்படுத்துவதற்கும் சமஸ்கிருத நூல்களை மொழிபெயர்ப்பதற்கும், பத்திரிகையொன்று அச்சிட்டு வெளிப்படுத்துவதற்கும், கையொப்பப் பணஞ் சேர்க்கின்றூர்கள்.

வடபுயக் கடலணை:—கொழும்புத்துறைமுகத்தின் வடபாகமாகக் கட்டப்பட்டுவரும் கடலணை கொஞ்சத்தூரத்திற்கு எட்டிவிட்டது. முன்னரே வேலைமுடிக்கப்பெற்றுத் தீபமேற்றப்பட்டிருக்குந் தென் கடலணையைப்போல இது அதிக நீட்சியுடையதன்று. இக்கடலணையில் ஓர் தம்பம் கிறவி அடுத்துவரும் ஐப்பசிமாசம் ௧ ந் திகதி துறைமுகத்துக்குரிய பசுமைநிறமுடைய தீபமேற்றுதற்கு ஆளுகைக்காரர் தீர்மானித்திருக்கின்றூர்களாம். சமுத்திர அலையில் அகப்பட்டுச் சேதமுறுது கப்பல்களைக் காத்தற்கு ஏற்ற உபகரணமாகிய இவ்வணை மிக்க பிரயோசனத்தையுடைத்தென்பதில் சிறிதும் ஆட்சேபமின்று. மு—ன்.

## கடிதம்

வைதிகசைவசுத்தாத்துவித

# சைவ சித்தாந்த சமயம்.

(சக-ம் பக்கத்தொடர்.)

சர௬. இருக்குவேதம் முதலாமண்டலத்து இருபத்திரண்டாம் அத்தியாயத்து நூற்றறுபத்தினாலாஞ் சூக்தத்து இருபதாம் மந்திரத்தினால்,

த்வாசுபர்ணாஸயுஜாஸகாயாசமாநம்வ்ருக்ஷம்பரிஷஸ்வஜாதே। தயோரந்ய: பிப்பலம்ஸ்வாத்வத்யநச்நந்நந்யோ அபிசாகசீதி॥

'இரண்டு அழகிய பறவைகள் (ஜீவான்மா பரமான்மா) இரட்டையாய் ஒன்றோடு மரமொன்றிலே வாழுகின்றன; அவைகளுள் ஒன்று கர்மபலனை அநுபவிக்கின்றது; மற்றது (அவ்வாறு) அநுபவிக்காது பார்த்துக்கொண்டுமாத்திரமிருக்கின்றது' என்று எடுத்துச்சொல்ல, சுவேதாசுவதரோபநிடதமும் இந்த இருக்குவேதமந்திரத்தைத் தானே எடுத்தாண்டு பின்னரும் சில மந்திரங்களால் அதனை விளக்கிவிட, அதர்வணவேதத்தைச் சார்ந்த பாசுபத முண்டகோபநிடதமும் அம்மந்திரத்தையே தானுமெடுத்தாண்டு விளக்கிப்போந்தது.

யதாபச்ய: பச்யதே ருக்மவர்ணம் கர்த்தாரமீசம்புருஷம்ப்ரும்மயோநிம்। ததாவித்வாந்புண்யபாபேவிதூய நிரஞ்சந:பரமம் ஸாம்யமுபைதி॥

'பார்ப்பவன் (ஆன்மா) பரமகாரணரும் புருஷரும் கர்த்தாவும் சுவர்ணநிறமுடையாருமாகிய ஈசனை, எப்போது பார்க்கின்றானோ அவ்வறிஞன் அப்போதே புண்ணியபாவமொழிந்து மலமிலனாய்ப் பரமசாம்மியத்தை அடைகின்றான்' என்று கூறிற்று. அவ்வுபநிடத வாக்கியங்களுக்கு உபப்பிரம்மணமாகக் கந்தபுராண உபதேசகாண்டம்.

தஞ்சசாக்ஷிதேவேச:பச்யந்தேவாகதா புந:।
தாக்ஷிதேவாபிசர்வத்ரபரிபூர்ணமபீச்வரம்।
யதாபச்யதிதேவேசம்ஸியந்தாரந்நிரஞ்சனம்।
விதூயபுண்யபாபஞ்சததாசைவஜிதஞ்சதஸாம்॥

'ஆன்மாவையும் சடப்பொருள்களையும் தேவேசர் (சிவன்) பார்க்கின்றார், அவரை அவைகள் பார்ப்பனவன்று, ஜீவான்மாவானவன் யாண்டும் பரிபூரணராயும், நியந்தாவாயும், இரண்மயராயும், ஈசராயுமுள்ள தேவேசரை (சிவனை) எப்போது பார்க்கின்றானோ அப்போது தானே புண்ணியபாபமொழிந்து சிவைக்கியத்தை அடைகின்றான்' என்று கூறிற்று. மேலும்,

முக்தச்சிவசமோபவேத்।

'முத்தன் சிவசாம்மியமாகின்றான்,'

க்ஷீணேசர்மமலேதஸ்மிந்புமாந்சிவசமோபவேத்।

'ஆன்மாவைப் பற்றிய மலம் ஒழிந்தபோங்காலத்துப் புருஷன் சிவசாம்மியமாகின்றான்' என்றும்,

முக்தசமஸாரீமுக்தச்சிவசமோபவேத்।

'நீக்கப்பெற்ற சம்சாரத்தையுடையனாகிய முத்தன் சிவசாம்மியமாகின்றான்' என்றும்,

யதாபச்யேத்பச்யந்தம்ருக்மவர்ணங்கர்த்தாரமீசம்புருஷம்ப்ரம்மயோநிம்। ததாவித்வாந்புண்யபாபேவிதூயநிரஞ்சந:பரமமுபைதிசாம்யம்॥

'ஜீவான்மாவானவன் அனைத்தையும் பார்ப்பவரும் இரணியவர்ணரும் கர்த்தாவும் பிரமகாரணரும் புருஷருமாகிய ஈசனை (சிவனை) எப்போது பார்க்கின்றானோ அவ்வறிஞன் அப்போதே புண்ணியபாபமொழிந்து மலநீங்கனாய் பரமசாம்மியத்தை அடைகின்றான்' என்றும்,

சாத்யஞ்சிவசமாநதா।

'சிவனை ஒத்துத் தயங்கல் சாத்தியம்' என்றும்,

பரமம்மமசாதர்ம்யம்ப்ராப்யநிர்வ்ருதிமாப்நுய:।

'பரமமாகிய சிவசாதர்ம்மியத்தை அடைந்து பாசநீக்கப்பெறுவர்' என்று சிவபுராணங்கடோறும் சொல்லப்படுதலில், சிவசாம்மியம் சிவசாதர்ம்மியம் சிவைக்கியமென்பவற்றால் அறியப்படும் பொருள் என்னையெனில் சைவபாஷ்யகாரரும் சிவார்க்கமணிதீபிகையுடையாரும்,

தயோர்சிவப்ரம்மணோர்வ்யாப்யவ்யாபகபாவேநாநந்யத்வம்।

அந்தச் சீவான்மாவுக்கும் பிரமத்துக்கும் வியாப்பிய வியாபக பாவத்தினாலே அநந்நியத்துவமாமென்றும்,

தத்சமாநகுணசாராகைவல்யலக்மீ:ப்ரயோசகப்।

பல வர்ணங்களையும் பற்றுகின்ற படிகமானது ஞாயிறுச்சிப்போதில் கண்ணியக்கால் சூரியகிரணமொன்றையே பற்றி மற்றோர்வர்ணத்தைப் பற்றாது ஒழிந்து பிரகாசமேயாய்ச் சர்வாகாரமாகி விளங்குகின்றாற்போல, மாயோபாதியேனும் கலாபஞ்சகமேனும்நீங்கப்பெற்ற சீவான்மாவானவன் தீவிர தீவிரதர சத்திநிபாத கண்ணியக்கால் ஞானக்கூத்தனொருமூர்த்தியோடு குறுகியருளும் அருளுபதேசத்தால் பாசபடலமெல்லாமொழிந்து சர்வஞ்ஞானேத்தாஞ் சொல்லியவாறு தற்றருமதருமியாய் "சர்வஞ்ஞாதி சிவசமானகுணசார கைவல்லிய லட்சுமியை அடைதலே பிரயோசனம்" என்று கூறுமாற்றால் அவ்வுண்மை அறியப்படும். பெத்தகாலத்திலே மலத்தினாலே தடைப்பட்டு, கலாதிகளால் ஏகதேசத்தில் விளங்கிச் சோபாதிகமாய்க் கிஞ்சிதஞ்ஞத்வ கிஞ்சித்கர்த்திருத்வங்களாம் ஆன்மாவின் ஞானக்கிரியைகள் அக்குழுப்போயவழி ஆடையின் வெண்மை ஆடைமுழுவதும் விளங்கினாற்போல, மலநீங்கிய பின்னர் ஆன்மவியாபகமுழுதும் நிருபாதிகமாய் சர்வதோமுகமாய் சர்வதாபி வியக்தமாய் விளங்கும். இந்த அர்த்தத்தை நோக்கிச் சிவனுடைய சர்வஞ்ஞத்வ சர்வகர்த்திருத்துவங்களும் ஆன்மாவுடைய சர்வஞ்ஞத்வ சர்வகர்த்திருத்துவங்களும் ஒப்பனவேயாம். அங்ஙனமாயினும் சிவனுடைய சர்வஞ்ஞத்வ சர்வகர்த்திருத்துவங்கள் ஔபசிலேஷிகவியாபகமாதலின், சர்வவஸ்துக்களையும் விஷயீகரிக்கும். ஆன்மாவுடைய சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்கள் அவ்வாறாகாது படிகம்போல, தத்பாவபாவமாய் வியாபிக்குமாதலில் அவ்வொன்றனையே விஷயீகரிக்குமல்லது மற்றையவஸ்துக்களை விஷயீகரிக்கமாட்டாவாதலில் இந்த அர்த்தத்தை அபேக்ஷித்து ஆன்மாவுடைய ஞானக்கிரியைகள் கிஞ்சித்ஞத்துவ கிஞ்சித்கர்த்திருத்துவங்களேயாவனவன்றி ஒப்பாகமாட்டா. ஆகவே, சிவனுடைய சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்கள் ஔபசிலேஷிக வியாப்தியினால் சர்வவஸ்துவிஷயமுமாம் என்பதும், ஆன்மாவுடைய சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்கள் தத்பாவபாவ வியாப்திமாத்திரையில் ஏகதேசவஸ்து விஷயமாமென்பதும் முடிந்தபொருளாய் முற்றும். இக்கருத்தடங்கியே பாசுபதமுண்டகோபநிடதம் 'நிரஞ்சனனாய்(மலமிலனாய்)சீவான்மா பரமசாமியத்தை அடைகின்றான்' எனப் பொருள்படுகின்ற மந்திரத்தையெடுத்து,

ஆத்மக்ரீட ஆத்மரதிக்ரியாவாநேஷப்ரம்மவிதாம வரிஷ்ட:।

'பிரமவித்துக்களுள்ளே சிரேஷ்டனாகிய இவன் ஆன்மஞான இச்சாக்கிரியாவானாகின்றான்' என்றுகூறிற்று. ஈண்டு 'ரதி' என்றமையால் இச்சையும், 'கிரியாவான்' என்றமையாற் கிரியையும் வெளிப்படையாகப் பெறப்பட, 'கிரீட' என்றமையால் தாற்பரிய இடவாற்றல்கொண்டு ஞானமும் பெறப்பட்டதாயிற்று. சிதசுவேதாசுவதரத்திலே பராசத்தி இயல்பும் சலாதிசெரியல்பும் பேசப்பட்டவிடத்து ஆங்குப் பேசப்படாத ஆதிசத்தி இச்சாசத்தியும் பிறவும் வியாசபுராணாதிகளாலும் இரத்தினத்திரய பரீக்ஷைமுதலியவற்றாலும் தழுவப்பட்டமைபோலாமென அறியப்படும். இவ்வுரிடதப்பொருள்கொண்டே பரமோக்ஷநிராசகாரிகாப் பிரகரணம்

சைதந்யந்த்ருக்க்ரியாரூபந்தசஸ்த்யாத்மநிசர்வதா।
சர்வதச்சயதோமுக்தௌச்ருயதேசர்வதோமுகம்॥

ஞானக்கிரியாரூபமாஞ் சைதந்நியம் ஆன்மாவிலே எக்காலமுமுள்ளது; (முத்திக்காலத்திலே) அந்தஞானக்கிரியைகள் எக்காலத்தும் எவ்விடத்தும் வியாபகமாய் விளக்கும்' என்று விளக்கிற்று. (வரும்) சி செ

---

## பிரபஞ்சவிசாரம்.

(மாயாவாதிமதமறுதலை)

கக-ம் பக்கத்தொடர்.

கூ. பிரமத்தின் பிரதிபலினமே சீவர்களாமாயின், இந்தச் சீவர்களிற் காணப்படும் உபாதிகள் எல்லாம், பிரமத்திலும் உண்டென்றபடியாம். என்னை? ஒரு பொருளில் உள்ள இலக்கணமே அதன் பிரதிபிம்பத்திலும் காணப்படுமாதலின். இங்ஙனமாயின், சீவோபாதிகள் எல்லாம் பிரமத்தின்கண்ணும் உண்டென்றாய் அப்பிரமலக்கணம் பிறழ்வுற்றழிந்திடுமாம். அற்றன்று. புனல் அசைய அதன்கட் பிரதிபலித்த சூரியபிம்பமும் அசைவுற்றிடும். அதுபோல, மாயை அசைய அதன்கட் பிரதிபலித்துள பிரமசாய்கைகளும் அசைவுற்றிடும் என்பதன்றிப் பிரமம் அசைவுறுதல் இல்லை என்பீராயின்; புனலைச் சலிக்கச்செய்வது வாயு; அதுபோல மாயையைச் சலிக்கச் செய்வது ஒருபொருளுமுண்டாமோ? ஆம் என்றால், இது நமது மாயாவாதிகளுக்குச் சம்மதமாகுமோ? அற்றன்று மாயையைச் சலிக்கச் செய்வது பிரமமே என்பீரேல், இது கூடாதென்பது மேலே விளக்கப்பட்டது. அங்ஙனமன்று; மாயைக்குச் சலனம் இயற்கை எனின், மாயை ஒரு சடப்பொருள். சடப்பொருள்களிடத்து இயற்கையன்றிச் செயற்கை காணப்படுதல் கூடாது. சலனம் செயற்கையாகவே இது மாயைக்கண் இயற்கையாயுளதென்னை அமையாதென்க.

௪0. ஒருபொருள் பிறிதொருபொருளிற் பிரதிபிம்பிக்குமிடத்து, பிரதிபிம்பிக்கும் பொருள் பிரதிபிம்பத்தை ஏற்கும் பொருளின் வேறாதல் வேண்டும். அங்ஙனமாயிற்றானே பிரதிபிம்பநியாயம் சித்திக்கும். இங்ஙனமாயின், பிரதிபிம்பிக்கும் பொருளாகிய பிரமமும் அப்பிரதிபிம்பத்தை ஏற்கும் பொருளாகிய மாயையும் வேறாதல் வேண்டும். எனவே மாயையுள்ளவிடத்தில் பிரமம் இல்லை எனப்பட்டு நமது மாயாவாதிகளது பிரமபரிபூரணத்வம் பங்கமுற்றழியுமாம். அற்றன்று: மாயை பிரமத்தின் வேறாயதல்ல, அது பிரமமுமல்ல; அது அநிர்வசனீயம் ஆகலின், பிரமபரிபூரணம் இதனாற் பங்கப்படுமாறில்லை என்பீராயின், (இதுபோலவே ஆன்மாக்களும் சிவத்தின் வேறுவனவுமல்ல, சிவமாவனவுமல்ல என்னும் சித்தாந்திகள் கொள்கையையும் கைக்கொண்டாற் பெறப்படும் இழுக்கென்னையோ? அது கிடக்க) மாயை அநிர்வசனீயமாயினுமாக; அற்றேல் வசனீயமாயினுமாக. அது பிரம பிரதிபிம்பத்தை ஏற்றற்றகுதியுடைத்தாதற்கு அப்பிரமத்தோடு அபேதமாயிருத்தல் கூடாது. அத்தகுதி அது பிரமத்தின் வேறாயிருந்தாலே சித்தித்தற்குரியதாம், என்னை? பிரமமும் மாயையும் ஒருபொருளேயாமாயின், தன்னில் தான் பிரதிபலித்தல் என்னும் விருத்தமாய் முடியும். ஆகவே எவ்வாற்றானும் அது பிரமத்தின் வேறாயதோர் பொருள் என்பது நன்றாக காட்டப்படும். படவே அதனை அநிர்வசனீயம் என்பது அமையாதென்பதும், எனவே அவரது பிரமபரிபூரணத்வத்துக்கு இவர் செய்யும் பரிகாரம் அநுகூலப்படாதென்பதும் பெறப்பட்டு பிரமம் மாயையிற் பிரதிபலித்துச் சீவதோற்றங்களைத் தோற்றமாத்திரையால் உண்டாக்கும் என்னும் நியாயம் நிராகரிக்கப்பட்டழியுமாமென்க. அன்றியும் யாதொருபொருள் பிறிது யாதொரு பொருளோடு சம்பந்தமுற்றிருக்கும் என்னுமிடத்து, அந்தச் சம்பந்தம் பேதசம்பந்தமாயிருத்தல் வேண்டும், அல்லது அபேதசம்பந்தமாயிருத்தல் வேண்டும், அல்லது பேதாபேதசம்பந்தமாயிருத்தல் வேண்டும். இம்மூக்கூற்றுள் ஒன்றுமில்லை என்றால், அப்பொருள் சூனியம் என்றே கொள்ளத்தக்கதன்றி, அதனை அநிர்வசனீயம் என்று புரட்டக் கருதுதல் வெறும் பிதற்றாமென்க. மாயையைப் பிரமத்தோடு அபேதசம்பந்தமுடையதோர் பொருள் எனக் கொண்டால், அம்மாயைக்கட் காணப்படும் தோஷங்கள் எல்லாம் பிரமத்தின் தலையிலே வந்து சூழுமாதலின் அது பிரமத்தோடு அபேதம் என்கை சிறிதும் பொருந்தாது. அபேதமாகாதொழியின், அது பேதமாயிருத்தல் வேண்டும் அல்லது பேதாபேதமாயிருத்தல் வேண்டும். இவ்விரு சம்பந்தத்துள் எந்தச் சம்பந்தங்தான் அதன்பாற் கேட்கப்படினும் அது பிரமம் அல்ல என்பதே முடிபாகும். ஆகுமேல், இந்த மாயை இருத்தற்கு இடமுண்டு, சீவர்களுக்குமாத்திரமோ அங்ஙனம் ஓர் இடம் இல்லாமல் பிரமபரிபூரணம் முடிக்கொள்ளும்.

௪௧. சூரியன் நீரிற் பிரதிபிம்பிக்கும் என்னுமிடத்து அப்பிரதிபிம்பத்தைக் காண்பான், அவ்விருநிறப்பொருளினும் வேறாகிய பிறிதோர் பொருளேயாம். அந்தப்பொருள் யாரேயோ? பிரதிபிம்பங்களாகிய சீவர்களுக்கே அந்தப் பிரதிபிம்பங்கள் தோற்றமென்கை சிறிதும் சகையாடற்குரியதாம். என்னை? பிரதிபிம்பங்கள் விளங்குவது அப்பிரதிபிம்பங்களை ஏற்கும் பொருளிலாம். இந்தப் பொருளில் அந்தப் பிரதிபிம்பங்கள் அமைந்துள்ளமை தோற்றுவது, அப்பொருளின் வேறிடத்துள்ள பொருளுக்கேயாம். ஆகவே அப்பொருளிற் பிரிவின்றி அதன்பாற்றானே அமைந்துள்ள பிரதிபிம்பங்களுக்கு அவை தோற்றமென்பது] பெருமடமெனவிடுக்க.

௪௨. இனி அந்த மாயையிலே பிரமம் இங்ஙனம் பிரதிபலிக்கவேண்டிய காரணம் என்னை! இந்தப் பிரதிபலனத்தால் பிரபஞ்சத்தின்கண்ணே சொல்லுக்கடங்காப் பெருந்துன்பங்களும் அஞ்ஞானப் பிரவிருத்திகளும் பிறவும் விளைவனவாக, இவை எல்லாம் விளைதற்கேதுவாகப் பிரமம் மாயையிற் பிரதிபலிக்க வேண்டிய நோக்கந்தான் யாதோ? அதை நாம் அறியேம் என்பீரேல், தோஷங்களுக்கிடனாகிய இவை எல்லாம் பிரமசக்தியின் நிகழ்ந்துகொண்டிருக்கும் என்று அப்பிரமத்தின்மேல் சீகருதற்குரிய குற்றங்களை மாத்திரம் அறிவீர், இங்ஙனமான தோஷங்கள் நிகழவேண்டியதேற்றுக்கு என்பதை அறியீரோ? நீர் அறியாவிடினும் தோஷம் தோஷமே. ஆகவே இங்ஙனமாய தோஷங்களை காட்டும் ஒரு கொள்கை பெரிதும் அபத்தமாமென்பது சொல்லிக் காட்டவேண்டுமோ!

௪௩. இந்தப் பிம்ப பிரதிபிம்ப உதாரணம் காட்டுவது, பரவஸ்து விகாரமுறாது பிரபஞ்சங்கள் எல்லாம் தோன்றுமாற்றை எடுத்துக்காட்டும் அவ்வளவைக்கேயன்றி, அவரது பரிபூரணத்வத்தை அநுசரித்தல்ல என்பது சில மாயாவாதிகளது சமாதானம். இவர் இவ்வுதாரணத்தை எடுத்துத் நீர்க்காலோசனை செய்வாராயின் இங்ஙனமாய சமாதானம் கூறத் தலைப்படார். சூரியன் விகாரமுறாது இருப்பப் பிரதிபிம்பந் தோன்றுவது, அச்சூரியன் தன்னின் வேறாகிய பிறிதோர்பொருளிற் பிரதிபலித்தல்பற்றியாம். இங்ஙனமின்றி இப்பிரதிபலினம் சூரியனிற்றானே காணப்படுமாயின் அது விகாரமுற்றிடும் என்பதே முடிக்கப்படும். இங்ஙனமே பிரமமும் தம்மை ஒழிந்த பிறிதோர் பொருளிற் பிரதிபலிக்குமாயினன்றே அதன்பால் விகாரமின்மை கேட்கப்படும். இங்ஙனமின்றி அந்தப் பிரமத்தின்கட்டானே இவ்விகாரங்கள் பிரதிபலிக்குமாயின், அது விகாரதோஷத்திற் படாதொழிதலும் கூடுமேயோ? இதிங்ஙனமாக; இது தோற்றமாத்திரையன்றி உண்மை அல்ல என்பீராயின், தோற்றமாத்திரையிற்றான் விகாரத்வம் புணுதல் சுத்தப்பிரமத்துக்கு அடுக்குமாமோ? அடுக்காதெனவிடுக்க. இன்னமும் சூரிய பிரதிபலின தோற்றம் சித்திப்பது அப்பிரதிபலினத்தை ஏற்கும் நீரும் அத்தோற்றத்தைக் காணும் ஓர் சித்தும், அந்தச்சூரியனின் வேறுதல் பற்றி, இங்ஙனமின்றேல் பிரதிபலினதோற்றம் முற்றாதாம். பிரமபிரதிபலினத்தின்கண்ணே, இங்ஙனமான மூன்றுப்பொருள்கள் உளவாதல் நமது மாயாவாதிகளது மதசித்தாந்தப்படி கூடாதாதலின், சூரிய பிரதிபிம்ப நியாயத்தை பிரம பிரதிபிம்பத்துக்கு எந்த அளவுக்குத் தானும் உவமானமாக எடுத்துக் காட்டுதல் கூடாதென்க. இங்ஙனமே சூரிய பிரதிபிம்ப நியாயத்தை விசாரிக்கவே அது விகாரமுகத்து நிற்றற் றகுதியில்லாது அழிந்தொழிந்தது. இனி ஐந்தாய கூற்றிற் செல்வாம். (வரும்) சுகதாசர்.

---

ஆனைக்கோட்டை

## மூத்தநயினார்கோவில் சிவப்பிரதிட்டை.

ஸ்ரீ. நமச்சிவாய முதலியாரவர்கள் நெடுங்காலம் கொழும்பில் வாசஞ்செய்தவர்களாயிருந்தாலும் தம்முடைய சென்னதேசத்தை மறவாமைக்கு அறிகுறியாக ஆனைக்கோட்டையிற் கட்டுவித்த சுப்பிரமணிய ஆலயத்துக்காக நாமெல்லாம் அவர்களை மகிழ்கிறதுமாத்திரமன்று போற்றவும்வேண்டும். இக்கோயிற்றிருப்பணி வெகு சிறப்பாகவும் பெலப்பாகவும் செய்யப்பட்டிருக்கின்றது. இதற்கேறக்குறைய ஐம்பதினாயிரம்ரூபாவுக்குமேற் செலவாயிருக்கும். இப்பவும் மேற்படி முதலியார் புத்திரர்களால் சென்றமீ ககூ செய்விக்கப்பட்ட சிவப்பிரதிட்டை இங்கு வந்து பார்த்தவர் எல்லாருடையவும் கண்களையும் மனதையுங் கவர்ந்திருக்கிறது சிற்பாசாரியரும் பிரதிட்டாசாரியரும் தத்தஞ் சாத்திரவிதி தவறாமல் வேதாகம ஒழுங்குப்படி பிச்சுக்குருக்கள் முதலானோர் முன்னிலையில் தங்கள் தங்கள் கிரியைகளை முடித்தார்கள். குருக்களுடைய சமயபத்தியும் கிரியாவல்லபமும யாவராலும் வியக்கப்படத்தக்கது. எசமான் வராதகுறைவேயன்றி வேறொரு குறைவுமில்லை. சமஸ்தபொருள்களும் கொழும்பிலிருந்தே வந்தன. (...............) தற்காலத்தில் இலங்கையிலுள்ள சிவாலயங்களெல்லாவற்றிலும் செல்வத்தாலும் சிறமத்தாலும் தலையாயுள்ளது. ஸ்ரீ. குமாரசுவாமி முதலியாரவர்களுடைய பொன்னம்பலவாணேசர்கோவிலன்றோ. அக்கோவில் கட்டடங்களைப் பார்த்து அதின்படி இக்கோவில் நித்தியநைமித்தியங்களையும் நடத்த எசமான்கள் ஏற்பாடுசெய்ய சிவபிரான் திருவருள்புரிவாராக.

இங்ஙனம்

கும்பாபிஷேக தரிசி.

t is further said that under pressure of showing not only large amount of work but also greater percentage of successful cases, the vaccinators operate even on children not in a fit condition to receive the lymph. The consequence is, as we learn, great suffering among such children, resulting also in some fatal cases.

We do not like to be alarmists. While admitting the benefits of vaccination we desire to see some relaxation of the rules that are now attempted to be enforced here, with more zeal than discretion.

## LOCAL AND GENERAL.

THE WEATHER—After a drought of nearly nine months, refreshing showers of rain have fallen throughout the District during the last three days, cooling the atmosphere and reviving the plants which were half dead in several localities. Sowing operations are going on with great activity everywhere.

Advocate's Examination—We are glad to learn that Mr. S. D. Tampoo, eldest son of Mr. T M. Tampoo, acting Police Magistrate of Jaffna, and Mr. Armstrong, eldest son of the late District Engineer Armstrong Mudaliyar, have passed the Advocate's Intermediate and Preliminary Examinations respectively We congratulate these gentlemen who are now in Jaffna on their success.

The Puttoor Well—Pumping operations are now being continued in this well, and we understand that a fresh vote of Rs 2000 has been sanctioned for this purpose. We also learn that the Udaiyar and Vidhan of Puttoor have been suspended for failing to find out the assailant of Mr. Tomalin, the Provincial Engineer. who was assaulted some weeks back at Puttoor on his way to the Town from this Well.

The Equitable Loan Company—A case has been instituted by the Rev. Father Maver against this Company claiming a sum of about Rs 15,000 When this intelligence was first published in the papers the public at once jumped to the conclusion that the financial condition of the Company was not sound. But its Secretary has written to the papers stating that a larger sum is due to the Company from the Reverend gentleman, and that claim in reconvention will be made to recover it from him. We shall carefully watch the proceedings of this case, as the public are very much interested in it We believe the cause of this action arose during the absence of Mr. Senathiraja, one of the Managing Directors and the life and soul of the Company from Colombo as Prosecuting Counsel of the Northern Circuit. Now that he has returned to the Metropolis, we hope the differences between the Company and the Rev. Father Maver will be settled and public confidence in it revived.

Personal—Mr. S. Chellappah Shroff of the Railway, Hatton, returned to his station on Monday last He was here on three months sick leave, during which he was examined by a Medical Board here under the presidency of Dr. Thornhill as to his fitness for further service under Government We understand that the Board was of opinion that he was fit for several years further services but recommended his removal to a dry climate. This officer was Shroff at Kandy, and while there, on the strength of Medical certificates, he had made several applications to Government to remove him for the benefit of his health to a dry climate. But the Government ordered him to Hatton and forced him against his wish to take up this appointment, with a slight increase to his pay. The removal to Hatton has considerably affected his health, necessitating his immediate return to Jaffna and going before a Medical Board. Now that the Medical Board has recommended a change to a dry climate, we hope he will be soon given a suitable appointment in some other Province.

—We are glad to note that a very keen interest is being shown in London in the study of Hindu Philosophy. English admirers of the Vedanta are raising a sum of money necessary to obtain quarters for the exposition of Eastern Philosophy in London. The proposal includes a large room for regular lectures, a library of book on Eastern philosophy, including all translations of Sanskrit literature, and a monthly magazine Subscriptions, it is said, are pouring in largely towards the noble object. We do not wonder at it. for whatever work or study the Britisher puts his head to, he does it with an enthusiasm that may well put us Indians to complete shame. —Arya Bala Bodhini.

## THE SUPREME COURT.

The second criminal sessions of the Supreme Court for the year 1896 commenced here on the 18th Instant, the Hon'ble D F. Browne Commissioner of Assize being the presiding Judge, Mr Swan acting as Registrar, Mr Prins as Private Secretary, Mr Kailasapillai as Tamil Interpreter, Mr de. Silva as Singhalese Interpreter and Mr. E S W. Senathirajah as Prosecuting Counsel Soon after the sessions was opened His Lordship inquired if there was any case to be tried by the Tamil-speaking Jury, and on receving a negative reply from the Prosecuting Counsel, they were discharged with thanks. There were only six cases on the Calendar The first case taken up was case No. 4 in which a Singhalese man of Negombo was charged with murder An English-speaking Jury with Mr. H. Todd as foreman was called to try this case Mr. Advocate Nagalingam defended the accused. The story of the prosecution was that the deceased who was a Nalava man by caste and a native of Thunnalai in the Pt. Pedro division was going on the day in question with his wife and children and some relatives of his, numbering about 6 or 7 persons, on a pilgrimage to the Hindu Temple called Vattupalai in the Mullaitivu District, and met the accused and about fifteen other Singhalese men who were engaged in fishing and drying fishes near Veddukadu The accused who is the son of the Muthalali, remarked to his companions that 'women of proper age" were going in the party of Tamils and advanced to them and asked for betel The women, however, took no notice of the remark and proceeded on their journey, but the deceased who was in the rear of the party was offended at the remark and retorted that one who made such indecent observations at females deserved betel being given to him. This exasperated the accused and he got hold of the deceased by his waist cloth and wanted to put him down. The deceased freed himself from the grasp of the accused who, however, with his companions, dealt several blows on the deceased with oars and cudgels that were near them. The result was that the deceased fell to the ground unconscious and with his skull fractured. His wife and children who ran way in fear returned to the place where the deceased lay and wept over him, as he was dying. But the accused and his companions forced them to remove him from that spot, saying that they also would be stabbed and thrown into the sea if they did not do so The wounded man was then by short stages removed to Kaddakadu, a distance of four miles from the scene of assault, and it took them more than twelve hours to reach that place, where he expired the next morning. After the case for the prosecution was over the accused gave evidence on his behalf, denying that he asked betel from the women, but admitting that the deceased was wounded in a quarrel with the Singhalese men of his party. He further stated that, though present on the occasion he did not inflict any of the wounds but acted as peace maker between the contending parties. He was, however, convicted of the lesser offence of culpable homicide not amounting to murder and sentenced to seven years rigorous imprisonment.

At 4 P. M. the same day case No. 3 was taken up. In this case one Eliyatamby Maruthappan a goldsmith of Kokuvil was charged with robbery and causing hurt to a woman of the same place. Mr. Nagalingam defended the accused. The Jury of which Mr. J. N. Sandrasekara was foreman convicted the accused of the second count only. Mr. Nagalingam having appealed to his Lordship to deal with the accused under the First Offenders Ordinance, he was the following day bound over to keep the peace for twelve months and to pay a compensation of Rs 30 to the complainant.

Two cases were disposed of on the 19th, cases Nos. 5 and 6 In the first case one Kanapathy, a man of the palla caste living at Urumpiray was charged with (1) unlawful possession of a housebreaking implement and (2) attempting to commit housebreaking at Alavetty. Mr Kanagasabai defended the accused, who was acquitted by the jury and discharged.

In the next case two young men of Mathagal were indicted for causing grievous hurt to a fellow villager Mr. Kanagasabai defended the accused also in this case. Both were convicted and the first accused was sentenced to 18 months rigorous imprisonment and to receive 5 lashes and the second accused to 9 months imprisonment.

On Monday the 21st Instant the Court resumed its sitting at 10 A. M; and the remaining two cases Nos. 1 and 2 were disposed of. Eight young men of Kokuvil and Thavadi were put into the dock charged with, (1) rioting armed with deadly weapons and (2) causing hurt to three persons who were complainants in this case. Mr. Nagalingam appeared for the 1st, 2nd, 3rd and 4th accused, and Mr. Allegakoen for the other four accused. Mr. Nicholas of the District Court was foreman of the Jury. This was a case of some importance as the alleged riot took place on the public road, at day time and within two miles from the Court House If the story of the prosecution was to be believed, it was a most daring riot that ever took place in Jaffna. That story was that there were cases and counter cases between the complainants and another faction at Suthumalai a village about four miles from Jaffna. On the 20th November last a Police Court case was for trial against the complainants in this case. It was inquired into by the Magistrate and dismissed. The losing side then hired the accused and treated them to drink to waylay and assault the complainants on their return home. The Complainants suspecting while in the court house that their adversaries were preparing to assault them complained to their Proctor Mr. Santiagopillai and wanted him to inform the Magistrate that they were afraid to go home. The Magistrate however, having left the bench Mr Santiagopillai was unable to do anything in the matter. The complainants returned to Chuthumalai in a cart, and on the Jaffna-Manipay road near Oddumadam they saw a crowd collected together and advancing towards them. Through fear they turned their cart in order to go to the Police Station and complain there But on the way they met the Police Vidhan of Vannarponnai West and complained to him of what took place This officer promised to safely conduct them to the limit of his jurisdiction and accompanied them as far as the 2nd mile post, where the accused with several others assaulted the complainants and illtreated them, causing them several confused wounds in different parts of their body in the presence of the headman and in spite of his warning The three complainants, the Police Vidhan, Proctor Santiagopillai and Dr Eliyatamby were called by the prosecution to support that story. Before calling upon the accused for their defence, His Lordship asked the Jury to return a verdict in favour of the accused if the story of the prosecution was discredited by them The Jury having declined to pronounce a verdict at this stage, the trial proceeded. The accused then severally entered the witness box and gave evidence on their behalf. Four of them were seriously wounded on that occasion and explained it by stating that the complainants met them on the spot in question and without any provocation inflicted on them several stab wounds, for the reason that one of them (accused) was cited by their opponents as a witness against them (complainants) On being cross-examined by the Prosecuting Counsel as to the reason of their going to that road, some miles distant from their village, three of the accused explained that they went to Manipay to remove a vehicle and being unable to do so they went by that road to the grand bazaar without returning home; and the other wounded accused said that though a native of Thavadi he was going from the Court to Changuvali and on seeing the parties fight, he went to separate them and got wounded No evidence was called to prove the story of the defence, except Dr Grenier who deposed to the wounds on the accused. Mr. Nagalingam and Mr. Allegakoen made able and impressive addresses on behalf of their clients, and Mr Senathiraja made a feeble reply. His Lordship summed up for acquittal and the Jury after some deliberation returned a verdict of not guilty, whereupon they were discharged.

At 4-30 P. M. the remaining case was taken up. A villager of Chulipuram was charged with culpable homicide not amounting to murder. Mr. Kanagasabai defended the accused who was convicted of grievous hurt and sentenced to three years rigorous imprisonment. His Lordship having thanked the jury for their services, the session came to a close

☞ PRINTED AND PUBLISHED BY V. CHUPPIRAMANIA PILLAI FOR THE PROPRIETOR AT THE SAIVAPRAKASA YANTRA OFFICE JAFFNA.